* 190 வினா—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடும்பநலத் திட்டப் பணிகளை மதிப்பிட மாநில அளவில் மதிப்பீட்டுக்குழு ஏதேனும் செயல்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சென்ஸஸ் கணக்குப்படி 51—61 அதிகரிப்பைக் காட்டிலும் 61—71-ல் மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது. ஆகவே ஃபாமிலி பிளானிங் மெதட்ஸ் தீவிரப்படுத்தப்படவேண்டுமா, மக்கள் தொகையை கட்டுப்படுத்துவது பற்றி மேலும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 51—61-ல் இருந்ததை விட விகிதாசாரக் கணக்குப்படி பார்த்தால் 61—71-இல் குறைந்திருக்கிறதே தவிர கூடி இருப்பதாகத் தெரியவில்லை. பர்சென்டேஜ் பிரபபோர்ஷன்படி பார்த்தால், ஆயிரத்திற்கு இத்தனை பேர் என்ற கணக்குப்படி பார்த்தால் இறப்பு விகிதம் குறைந்த காரணத்தினால் பிறப்பு விகிதத்தினுடைய வேகத்தால் ஏறுகிற மக்கள் தொகை அதிகமாக வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் 51—61-ல் இறப்பு விகிதம் எவ்வளவு இருந்ததோ அதை விட 61—71-ல் இறப்பு விகிதம் மிகவும் குறைவு பெற்ற காரணத்தினால், மக்கள் தொகை அதிகமாயிருக்கிறது. எனவே, இந்த குடும்ப நல திட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்கு நியாயம் இருக்கிறது.

Seasonal conditions in districts.

* 191 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether it is a fact that the Board of Revenue has received reports of adverse seasonal conditions in the districts during April and May 1972; and

(b) if so, the details thereof?